செ.வெ.எண்: 21 நாள்:09.08.2019

**கரூர் அரசுப் பொருட்காட்சியினை மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் இன்று (09.08.2019) தொடங்கி வைத்து 192 நபர்களுக்கு 1.75கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்**

----------------

கரூர் மாவட்டத்தில் தமிழக அரசின் செய்திமக்கள் தொடர்புத்துறையால் நடத்தப்பட்ட அரசுப்பொருட்காட்சியினை மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் இன்று (09.08.2019) தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமை வகித்தார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர்.இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும் வழங்கினார்கள். கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம.கீதா வாழ்த்துரை வழங்கினார்.

அரசுப் பொருட்காட்சியினை தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் விழா பேருரையாற்றியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படும் தமிழக அரசு மக்களுக்கு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையிலும், குழந்தைகளுக்கும் பொதுமக்களுக்கும் பொழுதுபோக்கும் அம்சங்களுடன் கூடிய அரசுப்பொருட்காட்சி இன்று கரூரில் வெகுவிமர்சையாக தொடங்கப்பட்டுள்ளது.

அரசுப் பொருட்காட்சியானது கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, மற்றும் திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட மாவட்டங்களில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் தமிழக அரசின் சார்பில் இரண்டாவது முறையாக இப்பொருட்காட்சி நடத்தப்படுகின்றது. 27 அரசுத்துறைகளின் அரங்குகளுடன் உள்ள இப்பொருட்காட்சியில், குழந்தைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பல்வேறு விளையாட்டுகளும் உள்ளது.

அரசின் சார்பில் தீட்டப்படுகின்ற திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் இந்த அரசுப் பொருட்காட்சி அமைந்துள்ளது. அனைத்து துறைகளின் சார்பிலும் அமல்படுத்தப்படுகின்ற நலத்திட்டங்களை, வளர்ச்சி பணிகளை, பொதுமக்கள் நலனுக்கான வசதிகளை மக்கள் அறிந்து கொண்டு அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள இதுபோன்ற பொருட்காட்சிகள் துணையாக இருக்கும். கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை பல்வேறு துறைகளின் சார்பிலும் பல்வேறு பணிகள், மக்கள் நலன் சார்ந்த எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அரசு செயல்படுத்துகின்ற நலத்திட்டங்கள் குறித்த தகவல்களை, அரசு நிகழ்ச்சிகளை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில் பாலமாக செயல்படுவது செய்தி மக்கள் தொடர்புத்துறை.செய்தி மக்கள் தொடர்புத்துறையின்சார்பில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய தலைவர்களை கௌரவிக்கும் வகையில் 65 மணிமண்டபங்கள் கட்டப்பட்டுள்ளது. செய்தியாளர்களின் ஓய்வுதியத்தை ரூ.4,000த்தில் இருந்து ரூ.8,000மாக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழக முன்னாள்

முதலமைச்சர் அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கான ஓய்வூதியத்தை ரூ.10,000மாக உயர்த்தி வழங்க அறிவித்துள்ளார்கள். அரசின் திட்டங்களை அனைவருக்கும் விளக்கும் வகையிலும், குழந்தைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்களுடனும்கூடிய இந்த அரசுப்பொருட்காட்சியினை அனைவரும் வந்து கண்களிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

விழாத்தலைமையுரையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவாக விளக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அரசுப்பொருட்காட்சி வெகுசிறப்பாக இன்று தொடங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரப்பலகைகள்தான் அதிகம். அந்த அளவிற்கு ஆயத்த ஆடை உற்பத்தியிலும், பேருந்துகள் தயாரிக்கும் தொழிலும், கொசுவலை தயாரிக்கும் தொழிலும் சிறப்பாக நடைபெறும் மாவட்டம் கரூர். சுமார் 5 ஆயிரம் கோடி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியை தருவது கரூர் மாவட்டம். அத்தகைய மாவட்டத்தில் பொழுதுபோக்கு அம்சங்களுக்கான இடங்கள் குறைவு. அந்த குறையை போக்கும் வகையில் இந்த அரசுப்பொருட்காட்சி 45 நாட்களுக்கு நடத்தப்படவது மிகவும் மகிழ்ச்சிக்குரிதாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களால், தேசிய அளவில் வழங்கப்பட்ட 33 விருதுகளில் 9 விருதுகள் தமிழகத்திற்கு கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கியுள்ளார்கள். புகழூரில் ரூ.490கோடி மதிப்பீட்டில் கதவணை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல நெரூர் மற்றும் குளித்தலையில் கதவணை அமைக்க ஆய்வு செய்து திட்ட அறிக்கை சமர்ப்பிக்க ரூ.50லட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்த கதவணைகளும் வரப்பெற்றால் மாயனூர் கதவணையையும் சேர்த்து கரூர் மாவட்டத்தில் 4 கதவணைகள் உருவாகும். கரூர் மாவட்டத்திற்கென்று சுமார் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய வரலாற்று சிறப்புமிக்க அரசு மருத்துவக்கல்லூரியினை வழங்கி காணொலிக்காட்சி மூலம் திறந்துவைத்தார்கள். அந்த அளவிற்கு கரூர் மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கிவருகின்றார்கள்.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை விளக்கும் வகையில் இந்த பொருட்காட்சி அமைந்துள்ளது. அரங்கில் இடம்பெற்றிருக்கின்ற அத்துனை துறைகளும் தங்களது துறையின் சார்பில் மக்களுக்கு செய்யப்பட்டு வருகின்ற பணிகளை தெளிவாக எடுத்துரைத்து அரசின் உதவிகளை அனைத்து தரப்பு மக்களும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள தடம் அமைத்து தருகிறது. இதுவெறும் காட்சி சாலையாக மட்டும் இல்லாமல் அரசின் கருத்துகளையும், கொள்கைகளையும், திட்டங்களையும், மக்களுக்கு எடுத்துரைக்கும் கருத்துக்கூடங்களாக இருக்கின்றது. அந்த நோக்கில் இன்றைய தினம் கரூரில் இந்த பொருட்காட்சி தெளிவாக திட்டமிடப்பட்டு மக்களுக்கு மிகவும் பயன்படுகின்ற வகையில் மேன்மையாக அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்துப்பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளும் கண்டுகளிக்க வேண்டிய பொருட்காட்சி. அரசின் திட்டங்கள் என்னென்ன செயல்படுத்தப்படுகின்றது, அத்திட்டங்களில் பயன்பெற என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டும், எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பன போன்ற தகவல்களை அடித்தட்டு மக்களுக்கும் விளக்கும் வகையில் இந்த அரசுப்பொருட்காட்சி நடத்தப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார்.

விழாவில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 192 பயனாளிகளுக்கு ரூபாய் 1,75,10,720 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து செய்திமக்கள் தொடர்புத்துறை, போக்குவரத்துத்துறை, வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சி முகமை, காவல்துறை உள்ளிட்ட அனைத்துத்துறைகளின் அரங்குகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டார்கள்.

இவ்விழாவில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.சந்தியா, திரு.லியாகத், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.க.பாவேந்தன், உதவி மக்கள் தொடர்பு அலுவலரகள் திரு.க.செந்தில்குமார், திரு.ராஜாமணி, சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.நிர்மல்சன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி ஜான்சி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**